முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் தொடர்ச்சியாக குன்னூர் ஒன்றிய தி.மு.க. சார்பில், பார்லியர் பஞ்சாயத்து, பெல்லட்டிமட்டம் பகுதியில் ஒன்றிய செயலாளர் ஜெ.பிரேம்குமார் அவர்களின் தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் ஆகியோர் இணைந்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் ஆர்.பி.பரமேஷ்குமார், க.ம.தமிழ்செல்வன், லட்சுமி, எம்.சதகத்துல்லா, சுனிதா நேரு, பார்லியர் ஏ.கே.வி.தீனதாயாளன், கருணாநிதி மகாலிங்கம், சர்தார் பாட்ஷா, ராமசாமி, ஜோசப், மகேஸ்வரி, ஜெயக்குமார், மார்ட்டின், செந்தில், மணிகண்டன், ரஜினிகாந்த், ராதா, ஜெகதல பங்கஜம், கிருஷ்ணகுமார், முருகவேல், மோசஸ், தினேஷ் மற்றும் கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஏற்பாட்டில் 12 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி வழங்கினார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பா.இராணி, துணைச் செயலாளர் சத்யா பழனிகுமார், பிரச்சார குழு செயலாளர் உமா மகேஸ்வரி, துணை செயலாளர் மாலதி, தாராபுரம் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், நகர கழக செயலாளர் சு.முருகானந்தம் உள்பட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, வட்டக் கழக, கிளைக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மோடி அரசின் அராஜக அநீதிகளை தட்டிக்கேட்பதில்

கலைஞராகவே விஸ்வரூபம் எடுக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஜூன் 19-

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதால் மோடி அரசின் அராஜக, அநீதிகளை தட்டிக் கேட்பதில் கலைஞராகவே விஸ்வரூபம் எடுக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஒன்றிய மோடி அரசின் அநீதிகளை, ஜனநாயக விரோத செயல்களை கண்டித்து: திமுகவினரை சீண்டாதீர்கள், சீண்டினால் தாங்க மாட்டீர்கள், எங்களுக்கும் எல்லா அரசியலும் தெரியும், இது மிரட்டல் அல்ல. எச்சரிக்கை என தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கர்ஜித்து இருப்பதன் மூலம் அவர் தலைவர் கலைஞராகவே உருவெடுத்து இருப்பதை பார்த்து இந்த நாடு பிரம்மித்து நிற்கிறது. உறவுக்கு கை கொடுப்போம். உரிமைக்கு குரல் கொடுப்போம் என்கிற உயர்ந்த தத்துவத்தை கூறி அதன்படி நின்றவர் தலைவர் கலைஞர். அராஜக செயல்கள் மூலம் தன்னையும், தனது கட்சியையும், ஆட்சியையும் மிரட்டி பார்க்க முயன்ற போதெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் அதனை எதிர்த்து விஸ்வரூபம் எடுத்தவர். ஆட்சியைப் பற்றி கவலைப் படாமல் மக்களுக்கு பணியாற்றக்கூடிய ஜனநாயகத்தை கட்டி காப்பதில் தலைவர் கலைஞர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட்டவர் என்பது நாடறியும். அதே வழியில் தான் இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் அநீதிகளை எதிர்த்து நிற்பதில் அராஜகத்தை தடுப்பதில் ஆண் சிங்கமாக செயல்படுகிறார். காரணம் அவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆவார்.

ஒன்றிய மோடி அரசு அதிகாரத்திற்கு வந்த நாட்களில் இருந்து பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இல்லாத மாநிலங்களில் பிற கட்சி ஆட்சிகளை பணிய வைப்பதற்கு, அரசு நடுநிலை புலனாய்வு அமைப்புகளான சிபிஐ, அமலாக்கத் துறை, வருமானவரித்துறை போன்றவற்றை பயன்படுத்தி, சோதனைகள் நடத்துவது, வழக்கு பதிவு செய்வது, கைது செய்வது போன்ற ஜனநாயக விரோத செயல்களை அரசியல் சட்டத்தை அப்பட்டமாக மீறி செயல்பட்டு வருவதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசையும் பணிய வைப்பதற்கு அதே பாணியில் மோடி அரசு முயற்சிக்கிறது.

அதனுடைய விளைவு தான் தலைமை செயலகத்தில் அமலாக்கத்துறை நடத்திய சோதனை. எந்த முன்னறிவிப்பும் இன்றி அமைச்சர் செந்தில்பாலாஜி கைது செய்யப்பட்டது. கைது செய்வதற்கு முன்பு அராஜகமாக அவரை துன்புறுத்தியது போன்றவையாகும். இப்படிப்பட்ட அராஜகங்களை பார்த்து முதலமைச்சர் பயந்து விடுவார் என கணக்கிட்டார்கள். ஆனால் அவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதால் இந்த அநியாயங்களை, அராஜகங்களை எதிர்த்து ஆணி அடித்தார் போல் இந்த செயல்களுக்கு எல்லாம் திமுக அஞ்சாது என்று பதிலடி கொடுத்தன் மூலம் அவர் கலைஞராகவே மாறியிருக்கிறார்.

பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அமைவதற்கு முந்தைய 10 ஆண்டுகளில் அமலாக்கத்துறை நடத்திய மொத்த சோதனைகளின் எண்ணிக்கை 112 என்றும், மோடி அரசு அமைந்த பின் எதிர்க்கட்சிகள் மீது நடத்தப்பட்ட சோதனை 3000 என்றும் ஒப்பிட்டு காட்டி மோடி அரசின் பழிவாங்கும் செயலை இந்த உலகிற்கு படம்பிடித்து காட்டியிருக்கிறார். இந்த குற்றச்சாட்டுகளில் கூட நிரூபிக்கப்பட்டது வெறும் 0.05% மட்டுமே என்பதையும் வெளிப்படுத்தி உள்ளார்.

ஜனநாயகத்தின் பெயரில் ஆட்சி செய்யும் மோடி அரசு அறிவிக்கப்படாத நெருக்கடி நிலையை நடைமுறைப்படுத்தி வருவதை சுட்டி காட்டியதன் மூலம் மோடி அரசின் முகத்திரை உலக அளவில் கிழிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அராஜகத்தை அநீதிகளை தட்டி கேட்பதில், தடுத்து நிறுத்துவதில் விஸ்வரூபம் எடுப்பதற்கு பெயர்தான் திராவிட மாடல். அந்த திராவிட மாடல் ஆட்சியை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் முதல்வர் தளபதிக்கு பின்னால் 8 கோடி தமிழர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். மோடி அமித்ஷா அண்ணாமலைகள் இதற்குப் பிறகாவது தங்களை திருத்திக் கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி எச்சரிக்கிறது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் –

பிரகலா பிரபாகரே தனது நூலில் பா.ஜ.க. அரசின் முகத்திரையைக் கிழித்தெறிந்துள்ளார்!

‘விடுதலை’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூன் 19

எதிர்க்கட்சிகளை ஒடுக்கி அச்சுறுத்த சி.பி.ஐ, அமலாக்கத் துறை ஆகியவற்றைப் பயன்படுத்தி வழக்குத் தொடுப்பது பி.ஜே.பி.யின் அராஜக அணுகுமுறை என்று ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரான பிரகலா பிரபாகரே *‘The crooked Timber of New Delhi’* என்ற நூலில் பா.ஜ.க.வின் முகத்திரையை கிழித்தெறிந்துள்ளார் என ‘விடுதலை’ நாளேடு 18.6.2023 தலையங்கத்தில் எழுதியுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

தமிழ்நாடு அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்களை நெறிமுறைகளுக்கு மாறாக அராஜக முறையில் கைது செய்த ஜனநாயக விரோத பழி வாங்கும் எதேச்சதிகாரத்தைக் கண்டித்து கோவையில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டம் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மட்டுமல்ல, அரசமைப்புச் சட்ட நெறிமுறை நாகரிகத்தை விரும்புகிற ஒவ்வொருவரின் உணர்வினை வெளிப்படுத்தும் ஜனநாயகக் கோட்பாட்டின் வெளிப்பாடாகும்.

அமைச்சர் செந்தில்பாலாஜி மீதான வழக்கு, ஏதோ தி.மு.க. ஆட்சியில் அமலாக்கத் துறையால் தொடரப்பட்டது போன்ற தோற்றத்தை உருவாக்குவது அரசியல் நோக்கம் கொண்டதாகும்.

பத்து ஆண்டுகளுக்குமுன் தொடரப்பட்ட வழக்கு, இப்பொழுது இறக்கை கட்டிப் பறந்து பழி வாங்கும் முறையில் கொத்துவது ஏன்? அதுவும் நள்ளிரவில் நடத்தப்பட்ட கோரமான மூர்க்கத்தனமான செயல் இது என்று பொது நிலையில் உள்ளவர்கள் கூடக் கருதும் நிலையை ஒன்றிய அரசின் ஏவல்படையான அமலாக்கத்துறை ஏற்படுத்தி விட்டது.

இதில் அ.இ.அ.தி.மு.க. நடந்துகொள்ளும் விதம் கேலிக்குரியது மல்லாக்கப்படுத்து எச்சில் துப்பும் இழிதன்மையைச் சார்ந்தது.

செந்தில்பாலாஜி ஊழல் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இருப்பது ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் தானே! அதைக்கூட சற்றும் சிந்திக்காமல் அப்பட்டமான அரசியல் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் அ.இ.அ.தி.மு.க. நடந்து கொள்ளலாமா?

தி.மு.க. ஆட்சியில் அமைச்சர் செந்தில் பாலாஜி ஊழல் செய்தார் என்ற வழக்கின் அடிப்படையிலா கைது செய்யப்பட்டுள்ளார்?

சென்னைத் தலைமை செயலகத்திற்குள் புகுந்து அமலாக்கத்துறை அதிகாரிகள் அமைச்சரின் அறையில் சோதனை செய்வது என்பது முதல் அமைச்சர் கூறியுள்ளது போன்று அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை என்பதல்லாமல் வேறு என்னவாம்.

கோவை பொதுக்கூட்டத்தில் பேசிய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எந்தக் கருத்தை முன் வைத்தனர்?

அமைச்சர் செந்தில் பாலாஜி குற்றம் செய்திருந்தால் சட்டப்படி அவர் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவறு என்று சொல்லவில்லையே!

10 ஆண்டுகளுக்கு முன் நடந்ததாகக் கூறப்படும் குற்றத்தின் மீது, எந்தவித தார்மீக நெறிமுறைகளையும் பின்பற்றாமல் அமலாக்கத்துறை நடந்து கொண்ட முறையைத் தான் அழுத்தமாகக் கண்டித்துள்ளனர்.

2016 டிசம்பரில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தலைமைச் செயலாளர் ராம் மோகன்ராவ் அறையில், தலைமைச் செயலகத்தில் திடீர் என்று புகுந்து சோதனை செய்ததை அ.இ.அ.தி.மு.க. ஏற்றுக் கொண்டதா? அப்பொழுது கூட அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அமலாக்கத்துறையின் அத்துமீறிய, மாநில உரிமையைக் காலில் போட்டு மிதித்த அந்த அடாவடித்தனத்தை கண்டிக்கத் தானே செய்தார்; அ.தி.மு.க. ஆட்சியில் தானே நடந்தது என்று அரசியல் ஆதாயக் கண்ணோட்டமின்றி நடந்து கொண்ட கண்ணியத்தை ஒரு கணம் நினைத்துப் பார்க்க வேண்டாமா?

சி.பி.அய்., வருமான வரித்துறை, அமலாக்கத்துறைகளை இன்றைய ஒன்றிய பி.ஜே.பி. அரசு பயன்படுத்தும் விதம் உலக அரங்கில் இந்தியாவைத் தலைகுனிய வைத்து விட்டதே!

குஜராத் கலவரம் நடந்த கால கட்டத்தில் (அப்பொழுது முதல் அமைச்சர் நரேந்திர மோடியே) அன்றைய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயி என்ன சொன்னார்?

“எந்த முகத்தை வைத்துக் கொண்டு வெளிநாடு செல்லுவேன்?” என்று புலம்பினாரே, அந்த நிலைதானே இப்பொழுது நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய பி.ஜே.பி. அரசிலும் நடந்திருக்கிறது.

கோவைப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய திராவிடர் கழகத் தலைவர் எடுத்துக் காட்டிய ஒரு தகவல் மேடையில் அமர்ந்திருந்த தலைவர்களுக்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கே அனேகமாக புதிய வெகு சமீபத்தில் வெளிவந்த ஒன்றாகும்.

பி.ஜே.பி. ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கு அச்சுறுத்துவதற்கு, சி.பி.அய். வருமான வரித்துறை அமலாக்கத் துறைகளைப் பயன்படுத்தி வழக்குத் தொடுத்து சிறையில் தள்ளும் இது ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சியின் அராஜக அணுகுமுறை என்பது குறித்து அண்மையில் வெளிவந்த *“The Crooked Timber of New India”* என்ற நூலில் இருந்து ஆதாரத்தை எடுத்துக் காட்டினார் ஆசிரியர் மானமிகு கி. வீரமணி அவர்கள்.

இந்த நூலை எழுதியவர் யார் தெரியுமா? ஒன்றிய பி.ஜே.பி. அரசின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பிரகலா பிரபாகர் என்பவர் தான் என்று சொன்னபோது அதிர்ச்சி ஒரு பக்கம், ஆரவாரம் மற்றொரு பக்கம் என்று மக்கள் கடல் ஆர்த்து எழுந்தது.

எதையும் ஆதாரத்துடன் மேடையில் பேசும் நமது தலைவர் ஆசிரியர் அவர்கள் இந்த வகையில் மேலும் ஒரு அசாதாரண அருமையான முத்திரையைப் பொறித்து ஒன்றிய பாசிச பி.ஜே.பி. அரசின் முகத்திரையைக் கிழித்தெறிந்தார்.

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பதுதான் இன்றைய ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சியின் நிலை!

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

கழகத்திலிருந்து நிரந்தரமாக நீக்கம்!

தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் நிரந்தரமாக நீக்கி (Dismiss) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 18.6.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - மா.சுப்பிரமணியன் - அனிதா ராதாகிருஷ்ணன் - கே.எஸ்.மஸ்தான் வாழ்த்து!

172-வது வட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆசிக் அலி இல்ல மணவிழா!

இரா.துரைராஜ் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி - ஐ.கென்னடி முன்னிலை!

சென்னை, ஜூன் 19 -

சென்னைதெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 172 -வது வட்டக் கழக துணைச் செயலாளர் எஸ். ஆசிக் அலி - ஏ.ஜன்னத் ஆகியோரது மகள் ஏ.பாத்திமா (எ) பவ்மீனா-எம்.யாசர் அராபத் ஆகியோரது நிக்கா (எ) திருமண விழா 21.6.2023 காலை 11 மணிக்கு சின்ன மலை புனித தோமையர் சமூக நலக் கூடத்தில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா.துரைராஜ் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி, வர்த்தர் அணி துணைச் செயலாளர் ஐ.கென்னடி, பகுதி அவைத் தலைவர் இ.முருகேசன், வட்டச் செயலாளர் எஸ்.பாட்சா, மாவட்டப் பிரதிநிதி க.உமாபதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் ஜி.யோவான், வே.முருகன், ஜி.செல்வராஜ், வே.ரமேஷ்குமார், கே.வி. ஜோய், உ.திருவேங்கடம், எல்.பரமன், ஹேமலதா, த. அன்பரச, எம்.பி.சகாதேவன், பொன். அனுமந்தன், என். கே.வெங்கடேசன், எஸ். அசோக், எம்.டி.நீலகண்டன், ஜவகர் புகாரி, டி.வழிவிட்டான், எம்.மருகன், என். சேகர், எம்.அப்துல் ரகுமான், வி.அபி (எ) ரபீக், கபாலி மறைக்காயர், வி.ஆறுமுகம், உ.கசேன், எம்.பாத்திமா, நைனாம்மா, பாஸ்கர், சாகுல் அமீது, உ.உசேன், ஆர். சுப்பிரமணி, எத்திராஜ், ஆர். ராஜன்பாபு, கஷ்மா முகைதீன், க.செண்பக பாண்டியன், செல்வகுகுமார், கௌரி சங்கர், அஜிஸ், சுல்தான் பாட்சா, க.கவுஸ்சரீப், வேலாயுதம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மீன்வளத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் ப.தாயகம்கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, காரம்பாக்கம் கணபதி, அசன்மௌலானா, துணை மேயர் மு. மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், க.தனசேகரன், பெ.மணிமாறன், த.விஸ்வநாதன், மு.மனோகரன், எஸ்.பாஸ்கரன், வாசுகி பாண்டியன், க.சோமு, பி.குணாளன், ப.சுப்பிரமணி எம்.சி., சைதை சாதிக், ராமஜெயம், அல்ஹாக், கே.எம்.முகம்மது அபுபக்கர், எஸ்.பீர்முகம்மது, முஹம்மது, அபுபக்கர் கோரி, பிஸ்மில்லாகான்,

ஆர்.ரஜ்குமார், மு. ஆரோக்கியம், அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர். ரமேண்,வி.பி.ஜானகிராமன், கவிதா கௌதம், எஸ். ஆர்.செந்தில், நா.ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், மு.இராஜா, க.மணி, சண்முகம், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோ கமலநாதன், எஸ்.முருகவேல், டி.வி. நரசிம்மன், ச.சேகர், நந்தகோபால், ராதாகிருஷ்ணன், மஜித், சுதாபிரியன், எஸ். ஜெ.சலாம், ந.பாபு, முகேஷ் லாரன்ஸ், கணேசன், க.ஒப்பிலாமணி, எஸ்.நசீர், கோ.ராஜவேல், குமரேசன் மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

எஸ்.பீர்நாகூர், எஸ்.அஸ்கர் அலி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் கிழக்காடி ஊராட்சி நடைபெற்ற கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாமினை மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் சாலவாக்கம் ஒன்றிய கழகச் செயலாளர் தி.குமார், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ்.ஆர். வெங்கடேசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவராமன், ஒன்றிய குழு துணைப் பெருந் தலைவர் கு.வசந்தி, ஒன்றிய குழு உறுப்பினர் சேகர், ஊராட்சி மன்ற தலைவர் கௌரி சங்கர், சத்யா சக்திவேல், முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர், மற்றும் வட்டார மருத்துவர், ஊராட்சியை சேர்ந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் உத்திரமேரூர் தொகுதி சமூக வலைதல ஒருங்கிணைப்பாளர் சு.முரளிதரன், ஊராட்சி மன்ற உறுப்பினர் பழனி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் லீலா வினோதன், உத்திரமேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செ.விஷ்ணு மற்றும் கிராம பொது மக்கள் பல்வேறு துறை மருத்துவர்கள் மற்றும் செவிலியர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏழாஞ்சேரி கெ. வரதன்
ஜூன் 19 (2003)

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்திலும் பின்னர், கழகம் துவங்கிய பின், கிளைச் செயலாளர், செய்யாறு வட்டச் செயலாளர், வெம்பாக்கம் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

1977–ல் காஞ்சிபுரத்தில் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற அண்ணாவின் “நீதிதேவன் மயக்கம்” நாடகத்தில் நடித்தவர்.

ஊராட்சி மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் என பல்வேறு பதவிகள் வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற ‘இந்தி எதிர்ப்பு போராட்டத்தில்’ காஞ்சிபுரம் அருகே உள்ள நத்தப்பேட்டையில் ரயில் மறியலில் ஈடுபட்டு ஆறுமாத கடுங்காவல் தண்டனையை கடலூர் சிறையில் அனுபவித்ததோடு, நெருக்கடி கால மிசாவில் கைது செய்யயப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.